8th August 1966]

பயிற்சிக்கு இடம் கொடுத்தால் அவர்கள் ஆசிரியர்கள் ஆக வசதி யாக இருக்கும். இப்படிப்பட்ட முறையில் விதிகளை மாற்றி யமைக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் அங்கஹீனம் இருந்தால் மாணவர்கள் மதிக்க மாட்டார் கள் என்ற கருத்து இருக்கிறது. இருந்தாலும், குறைந்த அங்க ஹீனங்களைப் பொருட்படுத்தக் கூடாது. அவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது அரசாங்கத்தால் வற்புறுத்தப்பட்டு வருகிறது.

திரு. து. ப. அழகமுத்து: நம்முடைய சட்டசபையின் எஸ்டி மேட் கமிட்டி இது சம்பந்தமாகச் சில சிபார்சுகளைச் செய்துள்ளது. அந்த சிபார்சுகள் எந்த அளவு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப்பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

Official Language (Legislative) Commission

* 201 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state with reference to the answer given to Question No. 107 on 5th February 1966, the extent of work carried out by the Official Language (Legislative) Commission till date and the time expected for the completion of the work?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The State Official Language (Legislative) Commission was inaugurated on 19th February 1966. The Commission is now engaged in finalising the Glossary of Legal Terms which will be the basis for translation of laws into Tamil. The Commission has so far finalised 169 words in letter A. The first volume of the Glossary covering letters A to I, is expected to be completed by the end of this year. Besides the above work, the Commission has scrutinised the Hindi versions of certain Central Acts forwarded by the Central Official Language (Legislative) Commission. The terms of reference to the Commission are so wide that it is not possible at present to visualise the time for the completion of its work.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இந்த ஹிந்திச் சட்டங்களை மொழி பெயர்க்கும்போது, ஹிந்தி வார்த்தைகளையே போட வேண்டும் என்று இந்தச் சட்டக் கமிஷன் சொல்லி யிருக்கிறதா? நம்முடைய சர்க்கார், அதற்கும் தமிழ் வார்த்தை களைப் போடலாம் என்ற கருத்தை வற்புறுத்தியிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதற்கு எந்தச் சொல் போடுவது என்பதிலே, எந்தச் சொல்லை சுலபமாகப் புரிந்து கொள்ளக் கூடுமோ அந்தச் சொல்லைப் போடுவது என்பதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை ஆகும். இதை மத்திய அரசாங்கமும் ஏற்றுக்கொண்டுள்ளது.

திரு. வை. சங்கரன்: இந்த 'க்ளாஸரி ஒர்க்' தவிர வேறு என்ன முக்கியமான வேலை இக் கமிஷன் பொறுப்பில் இருக்கிறது?

[8th August 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த வேலையை முதலிலே செய்வார்கள். அதற்குப் பிறகு தான் மற்ற வேலை.

திரு. செ. மாதவன் : எளிதாகப் புரிந்துகொள்ளவேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், ஹிந்தி சட்டங்களைத் தமிழில் மொழி பெயர்க்கும்போது, அது தமிழ் மக்களுக்குப் புரிய வேண்டும். இந்தியா முழுவதும் சட்டச் சொற்கள் ஒரே மாதிரியாக அமைய வேண்டும் என்ற காரணத்தைக் காட்டி ஹிந்திச் சொற்களைப் பயன்படுத்தவேண்டும் என்ற கருத்து சொல்லப் பட்டிருக்கிறதா? அந்தக் கருத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இரண்டையும் ஒன்றோடொன்று 'ரிகன்ஸைல்' பண்ணலாம். 'மாமூல்' என்கிற சொல் எல்லோருக்கும் புரிகிறது. அது தமிழ்ச் சொல் இல்லை என்பதற்காக அந்தச் சொல் வேண்டாம் என்று சொல்ல முடியாது. 'மாமூல்' போன்ற, புரியக்கூடிய அகில இந்திய வார்த்தையாக இருந்தால், அதை அப்படியே வைத்துக் கொள்ளலாம். அப்படியில்லாமல், வேறு ஒரு வார்த்தை அகில இந்திய வார்த்தையாக இருந்தாலும் அது புரியாதிருந்தால், அந்த வார்த்தை வேண்டாம் என்று தான் சொல்லுவோம். அப்படித்தான் பரிசிலனை செய்துகொண்டு வருகிறோம்.

Temple Executive Officers

*202 *Q.*—SRI M. D. THIAGARAJA PILLAI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that in some temples, the posts of Executive Officers are vacant; and

(*b*) if so, in how many temples?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) 84 temples.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : முதல் கிரேடு கோயில்களில் நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கப்படுவதற்கு பி.ஏ., பி.எல்., படிப்பு வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு ரூ. 175 தான் சம்பளம் இருப்பதால், அந்தப் படிப்புப் படித்தவர்கள் வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த பிறகு, உடனே வேலையை விட்டுப் போய்விடுகிறார்கள். அதனால் அநேக தேவஸ்தானங்கள் நிர்வாக அதிகாரிகள் இல்லாமல் காலியாக இருக்கின்றன. சிறிய கோயில்களைப் பொறுத்தும் அநேக தேவஸ்தானங்கள் நிர்வாக அதிகாரிகள் இல்லாமல் இருக்கின்றன. ஆகவே, அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்வதோடு கூட, காலியாக இருக்கும் இடங்களில் எல்லாம் நிர்வாக அதிகாரிகளை நியமிப்பதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நிர்வாக அதிகாரிகளைப் பப்ளிக் சர்விஸ் கமிஷன் தேர்ந்தெடுக்கிறது. தேர்ந்தெடுத்ததற்குப் பிறகு ஒரு சிலருக்குப் பயிற்சி அளிக்கவேண்டும். பயிற்சி அளிக்கப்பட்டு